


- வாழ்வோம்

அரசியலமைப்புச் சட்ட விதிகள் மற்றும் ஒன்றிய - மாநில உறவுகளைப் பாதிக்கும் சட்டங்கள் ஆகியவற்றை ஆய்வுசெய்து, தேவையான சீர்திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்காக, தி.மு.க. ஆட்சியில், உச்ச நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவை தற்போதைய த.வெ.க. அரசு கலைத்திருப்பது, ஒன்றிய அரசு மீதான ஆளும் கட்சியின் அதீத பயத்தைத் தெள்ளத்தெளிவாக வெளிப்படுத்துகிறது என விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இது தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள,`மக்கள் அதிகாரம்' அமைப்பினர், `பதவியேற்ற நாள் முதல் இப்போது வரை பாசிச பி.ஜே.பி.க்கு எதிராகவோ, பாசிச மோடி அரசுக்கு எதிராகவோ, ஏன் பாசிச மோடி - அமித் ஷா கும்பலின் தேசிய இன உரிமைகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எதிராகவோ, இதுவரை வாய் திறக்காத விஜய், இப்போது ஒன்றிய - மாநில அரசுகளின் உறவு குறித்து ஆய்வுசெய்ய அமைக்கப் பட்ட நீதிபதி `குரியன் குழு'வைக் கலைத்துள்ளார்.

'ஒன்றிய அரசின் கைப்பாவை' த.வெ.க.!

கவர்ச்சிவாதத்தை மட்டுமே அடிப்படையாக வைத்து ஆட்சி அமைத்த விஜய், இந்துராஷ்டிரத்துக்குப் பாதை அமைக்கும் பணியில், தீவிரமாக இருக்கும் விஜய், தமிழ்நாட்டை கார்ப்பரேட் கும்பலுக்கு ஒரு புறம் தாரைவார்த்துக்கொண்டே, இன்னொரு புறம் பாசிச பி.ஜே.பி.க்கு ஆதரவான நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறார்' எனக் கண்டித்துள்ளார்.

அதேபோல தனது சமூக வலைதளப் பக்கத்தில், கண்டனம் தெரிவித்துள்ள திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை ராசேந்திரன், `ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி மாநில உரிமைகளைப் படிப்படியாகப் பறித்து, ஒற்றை ஆட்சி நோக்கி நாட்டைக் கொண்டுபோகும் நிலையில், இந்த ஆணையத்தின் செயல்பாடு எவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு, அரசியல் பக்குவம் வேண்டும். இந்த ஆட்சியிடம் அதை எதிர்பார்க்க முடியாது.

தமிழ்நாடு அரசின் முடிவுகளை, சில சோதிடர்களும் ஒன்றிய ஆட்சியின் கைப்பாவையான சில அதிகாரிகளும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஆட்சி, மாநில உரிமைகளுக்கான குழுவைக் கலைத்திருப்பதன் வழியாக, மாநில உரிமைகளையே கலைத்துப் போட்டிருக்கிறது' எனக் கண்டித்துள்ளார்.

ஃப்ளாஷ்பேக்





எ.அஸ்வின்குமார்

கழகத் தலைவர் தலைமையில் மணவிழா!

2019-ஆம் ஆண்டு நவம்பர் 11-ஆம் தேதி, கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில், எனக்கும் - என் துணைவியார் கண்மணிக்கும் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. மணவிழாவில், கழகப் பொருளாளர் அண்ணன் டி.ஆர்.பாலு, தென் சென்னை மாவட்ட முன்னாள் கழகச் செயலாளர், மறைந்த அண்ணன் ஜெ.அன்பழகன் ஆகியோருடன் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டு வாழ்த்தினர். தலைவர் வாழ்த்துகையில், மாவட்டக் கழகத் துணைச் செயலாளராக இருந்த என் தாத்தா குறித்து, 'எந்தத் தியாகத்தையும் செய்யக்கூடியவர் 'வெல்டிங்' மணி எனக் குறிப் பிட்டது, எங்களுக்குப் பெருமையாக இருந்தது. இன்று மணவிழா நாளில், தலைவர் தலைமையேற்ற இந்தப் படத்தைப் பார்ப்பது பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

- எ.அஸ்வின்குமார், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், சென்னை தென்மேற்கு.

இதுபோன்ற தரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51620 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

கொலைகாரர்களுக்கு உடந்தை, கொலுவில் இருப்போரா?



82

கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

1982 -ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் தேதி, 'பால் கமிஷன் அறிக்கை' தொடர்பாகச் சட்டமன்றத்தில் விவாதம். எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர், 'என்ன பேசப்போகிறார்' என்பதை அறிந்துகொள்ள ஒட்டுமொத்த தமிழ்நாடும் காத்திருந்தது.

'பால் கமிஷன் அறிக்கை'யை அரசு வெளியிடுவதற்கு முன்பே, கலைஞர் 1981-ஆம் ஆண்டு நவம்பர் மாதமே அதை வெளியிட்ட நிலையில், அரசியல் களம் கொந்தளிப்பாக இருந்தது. எம்.ஜி.ஆர். அரசு திருச்செந்தூர் அறநிலையத் துறை அதிகாரியைக் கொன்றவர்களைப் பாதுகாக்கிறது என்கிற நெருக்கடி எழுந்தது. 'பால் கமிஷன் அறிக்கை'க்குப் பதில் அளிக்கிறேன்' என அன்றைய அறநிலையத் துறை அமைச்சர் ஆர்.எம்.வீரப்பன் அளித்த பதில் அறிக்கையும் குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்கு என்றே தயாரிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக, நீதிபதி பால் கமிஷன் ஏற்றுக்கொள்ளாத பல காரணங்களையும் ஆதாரமாக வைத்து, அரசின் மறுப்பு அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. அந்த அறிக்கையும் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

சட்டமன்றத்தில் கலைஞர் நிகழ்த்திய எத்தனையோ உரைகளில், மிகுந்த சிறப்புக்குரிய வாதமாக, ஆளுங்கட்சியை அசைத்துப்பார்த்த விவாதமாக 'பால் கமிஷன் அறிக்கை' மீதான விவாதத்தினைச் சொல்லலாம். ஒரு கையில், 'பால் கமிஷன் அறிக்கை', மற்றொரு கையில் ஆர்.எம். வீரப்பன் அரசு சார்பில் வெளியிட்ட 'மறுப்பு அறிக்கை'. இரண்டு அறிக்கைகளையும் கைகளில் வைத்துக்கொண்டு, சட்டமன்றத்தை 'சட்ட' மன்றமாக்கினார் கலைஞர்.

" பால் கமிஷன் அறிக்கை அவையிலே வைக்கப்படுவதற்கு முன்பு, என்னாலே வெளியிடப்பட்டதையொட்டி - நீங்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கையில் பாதி நடவடிக்கையையாவது - ஒரு கால் பகுதி நடவடிக்கையாவது - இந்தக் கொலை காரர்களைக் கண்டுபிடிக்க - கொலை காரர்களைக் கைதுசெய்து, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க - இந்த அரசு எடுத்துக் கொண்டதா என்றால் இல்லை" என்று தீவிரமான குற்றச்சாட்டுடன் தொடங்கியவர், திருச்செந்தூர் கோயில் அறங்காவலர்களாக இருந்த குற்றவாளிகளுக்கு அரசு கொடுத்த அடைக்கலத்தை அம்பலப்படுத்தினார்.

பாலும் - விஷமும்

'நாங்கள், ஆட்சி கலைக்கப்பட வேண்டும் என்று கேட்கவில்லை. அறங்காவலர் குழு கலைக்கப்பட வேண்டும்' என்கிறோம். அந்தக் குழுவில் உள்ள குற்றவாளிகளும் நிர்வாகிகளும், கிரிமினல் வழக்கிற்கு ஆளாக்கப்பட வேண்டும். கொலைக்கு உடந்தையாக இருந்து ரெக்கார்டுகளை மாற்றி, பொய் ஆவணங்களைப் புனைந்த கோயில் அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள், ரெவின்யூ அதிகாரிகள், மருத்துவத் துறையினர், இவர்கள் எல்லாம் சஸ்பெண்ட் செய்யப்பட்டு, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வளவையும் மூடிமறைக்கின்ற வகையில் பல காரியங்களை ஆற்றிய அமைச்சர் வீரப்பன் அவர்கள், ராஜினாமா செய்ய வேண்டும் என்று நான் சொல்ல மாட்டேன். முதலமைச்சர் அவர்கள் ஒன்றைப் புரிந்துகொண்டு - அதாவது,

"பழுதெண்ணும் மந்திரியின்
பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்" என்ற திருக்குறளைப் புரிந்துகொண்டு - எழுபது கோடி பகை வர்களைவிட பக்கத்திலே இருந்து பழுது எண்ணிக்கொண்டிருக்கிற மந்திரி ஆபத்தான வர் என்பதை முதலமைச்சர் உணர்ந்து - அமைச்சர்மீது நடவடிக்கை எடுத்து, அவரைப் பதவியிலிருந்து விலக்கச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு, இந்த அவையில் நீங்கள் வைத்திருக்கின்ற - இந்த அறிக்கை ('பால் கமிஷன் அறிக்கை'யை ஒரு கையில் காட்டி) பால்; (இது அரசாங்கத்தின் மறுப்பு அறிக்கை) விஷம், நல்ல வேளையாக இரண்டையும் கலக்காமல் தனித்தனியாக வைத்திருக்கிறார்கள். அதைக் கலக்காமலேயே - அரசு மறுப்பு அறிக்கை யைத் திரும்பப் பெற்று, 'பால் கமிஷன் அறிக்கை' அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வலியுறுத்துகிறேன்' என நீண்டது அவரது வாதம். கலைஞர் ஒரு மணி நேரத்துக்கு மேல் உரையாற்றினார்.

கலைஞர் அவர்கள் தனது உரைக்குப் பின்னர், அரசைக் கண்டித்து வெளிநடப்பு செய்தார். சட்டமன்றத்தில் பெரும் விவாதமான பின்னரும் குற்றவாளிகள் கைதுசெய்யப்படவில்லை. ஆனால், அவர்கள் அறங்காவலர் குழுவில் இருந்த ஐந்து பேரும் விலகிக்கொள்வதாகக் கடிதம் அளித்திருக்கின்றனர் என்று அரசு சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டது. ஆனால் அந்த விளக்கம், குற்றவாளிகளைக் காப்பாற்றவே உதவியது. ஒரு பக்கம், நீதிபதி பால் விசாரணை அறிக்கையை வெளியிட்டதற்காகப் பழிவாங்கல் நெருக்கடி, மற்றொரு பக்கம் குற்றவாளி களைக் காப்பாற்றும் ஆளுங்கட்சி. சட்டமன்றத்திலும் தீர்வு எட்டப்படாத நிலையில், மக்கள் மன்றத்துக்குத் தனது போராட்டத்தை மாற்றினார் கலைஞர். அன்றே அறிவித்தார், 'நீதி கேட்டு நெடிய பயணம்'

அக்கிரமங்களை அகற்றவே...

சீனாவின் மக்களைத் திரட்டி, புரட்சி கரமான மாற்றங்களை நிகழ்த்திய மாசே துங் மேற்கொண்ட நெடும் பயணம்போல, திருச்செந்தூர் அறநிலைய அதிகாரியின் படுகொலைக்கும் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் அரசாங்கத்துக்கும் எதிராக, மதுரையில் இருந்து திருச்செந்தூர் வரை, எட்டு நாட்களுக்கு மக்கள் திரளோடு நடைப்பயணமாக நீதி கேட்டு நெடிய பயணத்தை அறிவித்தார். "14.02.1982 மதுரையில் நடைபெற்ற வழியனுப்பு விழா பொதுக்கூட்டத்தில், அனலாக உரை யாற்றினார். "ஆட்சியை அகற்ற அல்ல; அக்கிரமங்களை அகற்றவே" என்ற அவரது உரையில் ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள, நீதியில் நம்பிக்கையுள்ள அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

இந்த அறப்போராட்டம் அறிவித்த நேரத்திலேயே "அறப்போராட்டத்தில் ஈடுபட வேண்டாம், நெடிய பயணம் தேவையில்லை; அறங்காவலர்கள் பதவி விலகிவிட்டார்கள்'' என்றெல்லாம் வேண்டுகோள் விடுத்தார், முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். தவிர, கலைஞருக்குத் தொலைபேசி வழியாகவும் அன்று காலை வேண்டுகோள் வைத்ததாக கலைஞர் குறிப்பிட்டுள்ளார். அதே நேரத்தில், அவரது இரட்டை வேடம் வேறு வழியில் வெளிப்பட்டது.

சென்னையில் அ.தி.மு.க. கட்சி அலு வலகத்தில் இருந்து, கழகம் குறித்தும் கலைஞர் குறித்தும், நீதி கேட்டு நெடிய பயணத்திற்கு எதிராகவும் கடுமையான வாசகங்கள் கொண்ட சுவரொட்டிகள் அச்சிடப்பட்டு மதுரைக்கு அனுப்பப்பட்டன. உண்மைக்கு மாறான செய்திகள் மலிந்த அந்த ஆயிரக்கணக்கான சுவரொட்டிகள் மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரை ஒட்டப்பட்டன. கலைஞர் நடைப்பயணம் செல்லும் வழியெங்கும், ஒவ்வொரு நாளும் ஒட்டப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டது. ஆனால், அவையெல்லாம் மக்கள் திரளில் எடுபடவில்லை. 'கொலைகாரர்களுக்கு உடந்தை, கொலுவில் இருப்போரா?' என்ற அவரது முழக்கம், அடுத்த நாள் திருமங்கலத்தில் முழங்கியது.

...தொடரும்

● தமிழ்.கா.அமுதரசன் ●

தெரிந்து கொள்வோம்

1950

பலதார திருமணத் தடை மாநாடு!

- ஆம் ஆண்டு, சென்னை தேனாம்பேட்டையில் கழகம் நடத்திய பெண்கள் மாநாட்டில், `பலதார மணம் கூடாது', `பல பெண்களை ஓர் ஆண் மணக்கும் அநீதி கூடாது', `ஆணைப் போல பெண்ணுக்கும் சொத்தில் பங்கு உண்டு', `சொத்துரிமை பெண்களுக்கும் இருக்க வேண்டும், `விவாகரத்து செய்துகொள்ள ஆணுக்கு மட்டுமல்ல; பெண்ணுக்கும் அருகதை உண்டு' ஆகிய தீர்மானங்களை நிறைவேற்றியது. இது தொடர்பாக, 1949-இல் பிரதமர் நேரு கொண்டுவந்த இந்து திருமணச் சட்டத் திருத்தத்தை, இந்த மாநாடு ஆதரித்தது.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034
Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Ph: 044 - 45849900